Registered with the Registrar
of Newspapers for India under
No. 10410

Registered No.
PY/44/2018-20
WPP No. TN/PMG(CCR)/
WPP-88/2018-20
Dated : 12-7-2018
Price : ₹ 2-00

# புதுச்சேரி மாநில அரசிதழ்

## La Gazette de L' État de Poudouchéry

## The Gazette of Puducherry

### PART - II

| | | |
|---|---|---|
| **சிறப்பு வெளியீடு** | **EXTRAORDINAIRE** | **EXTRAORDINARY** |
| *அதிகாரம் பெற்ற வெளியீடு* | Publiée par Autorité | Published by Authority |
| *விலை :* ₹ 2-00 | Prix : ₹ 2-00 | Price : ₹ 2-00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **வியாழக்கிழமை** | **2018 ஆம்** | **சூலை மீ** | **12 ம** |
| **No.** | **35** | **Poudouchéry** | **Jeudi** | **12** | **Juillet** | **2018** |
| **No.** | | **Puducherry** | **Thursday** | **12th** | **July** | **2018** |

**(21 Asadha 1940)**

புதுச்சேரி அரசு

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

*[அரசு ஆணை பலவகை எண் 9, புதுச்சேரி, நாள் 2018 ஆம் சூலை மீ 10 ம.]*

அறிவிக்கை

2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துகை, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீட்டுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மைச் சட்டத்தின் (சட்டம் எண் 30/2013) 112-ஆம் பிரிவின்படி, 2016-ஆம் ஆண்டு புதுச்சேரி நிலம் கையகப்படுத்துகை, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீட்டுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை விதிகளின் 34-ஆம் பிரிவைத் திருத்தம் செய்வதற்கான முன்வெளியீட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டது. காண்க:- புதுச்சேரி அரசு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 13-04-2018 தேதியிட்ட அறிவிக்கை எண் 2709/ DRDM/Rev./B1/2017. மேலும், இந்த அறிவிக்கையினால் பாதிப்படையக் கூடிய

அனைத்து நபர்களிடமிருந்து மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் எவையேனும் இருப்பின், இந்த அறிவிக்கையைக் கொண்டிருக்கிற அதிகாரமுறை அரசிதழின் நகல்கள் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யப்பெற்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் காலஅளவு முடிவுறுவதற்கு முன்னதாக அத்தகைய மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகளை அவர்களிடமிருந்து கோரிப்பெறுவதற்காக, 13-04-2018 தேதியிட்ட 16-ஆம் எண் சிறப்பு அரசிதழின் II பகுதியில் அந்த அறிவிக்கை வெளியிடப்பட்டது என்பதாலும்.

மேலும், மேற்சொன்ன அறிவிக்கையைக் கொண்டுள்ள அதிகாரமுறை அரசிதழின் நகல்கள் பொதுமக்களுக்கு 13-04-2018 அன்று கிடைக்கச் செய்யப்பெற்றன என்பதால்.

மேலும், மேற்சொன்ன அறிவிக்கை பொறுத்தமட்டில் குறித்திடப்பட்ட காலவரம்புக்குள் நபர் எவரிடமிருந்தும் மறுப்புரை/கருத்துரை எதுவும் பெறப்படவில்லை என்பதால்.

இப்பொழுது, புதுச்சேரி துணை-நிலை ஆளுநர், 2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துகை, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீட்டுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மைச் சட்டத்தின் (30/2013) 109-ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, பின்வரும் திருத்த விதிளைச் செய்கிறார். அவை, மேற்சொன்ன சட்டத்தின் 112-ஆம் பிரிவின் கீழ் வேண்டுறுத்தப்பட்டவாறு, புதுச்சேரி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 13-04-2018 தேதியிட்ட அறிவிக்கை எண் 2709/DRDM/Rev./B1/ 2017-இல் ஏற்கெனவே மேலாண்மைத் துறையின் 13-04-2018 தேதியிட்ட சிறப்பு அரசிதழின் II-பகுதியின் எண் 16-ல் வெளியிடப்பட்டுள்ளது.

1. குறுந்தலைப்பு, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

(1) இந்த விதிகள், "2017-ஆம் ஆண்டு புதுச்சேரி நிலம் கையகப்படுத்துகை, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீட்டுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை (திருத்தம்) விதிகள்" என வழங்கப்பெறும்.

(2) இது, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, புதுச்சேரி அரசின் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் தேதியன்றும் அது முதற்கொண்டும் செயல்விளைவுக்கு வரும்.

2. 2016-ஆம் ஆண்டு புதுச்சேரி நிலம் கையகப்படுத்துகை, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நியாயமான இழப்பீட்டுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை விதிகளில்,-

(i) 34(i)-ஆம் விதிக்கு மாற்றாகப் பின்வருவது அமைக்கப்பட வேண்டும், அதாவது:-

"(i) 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துகைச் சட்டத்தின் (சட்டம் எண் 1/1894) 4-ஆம் பிரிவின் கீழ் 31-12-2013-ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டிருக்கிறவிடத்து 24-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் (a) பிரிவுக்கூறின் கீழ் உள்ளடக்கப்பட்ட நேர்வுகள் பொறுத்தமட்டில், சந்தை மதிப்பைத் தீர்மானிப்பதற்கான தேதியானது. அத்தகைய அறிவிக்கை பிறப்பிக்கப்பட்ட தேதியாக இருக்கும்."

(துணை-நிலை ஆளுநரின் ஆணைப்படி)

**தேவேஷ் சிங்,** இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலர் (வருவாய்).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**DEPARTMENT OF REVENUE AND DISASTER MANAGEMENT**

(*G.O. Ms. No. 9, Puducherry, dated 10th July 2018*)

NOTIFICATION

Whereas, pre-publication notification for amendment of rule 34 of Puducherry Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules, 2016 were published, as per section 112 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (30 of 2013) *vide* Notification No. 2709/DRDM/Rev./Bl/2017, dated 13th April, 2018 of the Department of Revenue and Disaster Management, Government of Puducherry, and published in Part-II of the Extraordinary Gazette No. 16, dated 13-04-2018, for inviting objections and suggestions from all persons likely to be affected thereby before the expiry of a period of fifteen days from the date on which copies of the Official Gazette containing the notification were made available to the general public.

And whereas, the copies of the Official Gazette containing the said notification were made available to the general public on the 13th April, 2018.

And whereas, there is no objection/suggestion are received, from any persons within the stipulated time-limit with respect to the said notification.

Now, therefore, in exercise of the powers conferred by section 109 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013, (30 of 2013), the Lieutenant-Governor, Puducherry, hereby makes the following amendment rules, as the same having been previously published in the Notification No. 2709/DRDM/Rev./B1/2017, dated 13th April, 2018 of the Department of Revenue and Disaster Management, Government of Puducherry, and published in Part-II of the Extraordinary Gazette No. 16, dated 13-04-2018 as required under section 112 of the said Act.

1. *Short title, application and commencement.—*

(1) These rules may be called as the "Puducherry Right to Fair Compensation Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules (Amendment) - 2017".

(2) It shall extend to the whole of the Union territory of Puducherry.

(3) It shall come into force on and from the date of its publication in the Official Gazette of Government of Puducherry.

2. In the Puducherry Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules, 2016-

(i) for rule 34(i) substitute the following, namely,-

"(i) The cases covered under clause (a) of sub-section (1) of section 24 where the notification was issued on or before 31st December, 2013 under section 4 of the Land Acquisition Act, 1894 (1 of 1894), the date for determination of market value shall be the date on which such notification was issued."

(By order of the Lieutenant-Governor)

**DEVESH SINGH,** I.A.S.,
Special Secretary to Government (Revenue).

online publication at **"http://styandptg.puducherry.gov.in"**
*Published by* The Director, Government Press
*Printed at:* Government Central Press, Puducherry.
*Posted at:* Puducherry HPO on every Tuesday